**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 13/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | முத்துப்பாண்டி | Caste | : |
| Father/Husband Name | : | செல்லப்பா | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 04.07.2025**

**முதல் விசாரணை**

நான் புளித்தேவன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன உமாதேவி எங்கள் ஊருக்கு பக்கத்து ஊர்காரர் ஆவார். கடந்த 27.04.2018 ஆம் தேதியில் மாலை 06.45 மணிஎவில் நானும், மொக்கமாயன் என்பவரும் கருமாத்தூர் புதுப்பட்டி ரோட்டின் அருகே நின்று பேசிகொண்டிருந்தபோது, மேற்படி உமாதேவி குழந்தையுடன் வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் அதிவேகமாக அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. செல்வகுமார் என்பவர் வண்டியை ஓட்டி வந்தார். மேற்படி உமாதேவிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவரது மகனுக்கு மூக்கிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. பின்னர் ஆம்புலன்சு மூலம் அவர்களை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின்னர் மேல சிகிச்சைக்காக மதுரை அரசு

மருத்துவமனைக்கு அனுப்பிவிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி மேற்படி உமாதேவி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்றால் வெளிச்சம் இருந்தது. விபத்தில் இறந்துபோன நபர் எங்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர் ஆவார். முதல் விசாரணையில் புளித்தேவன்பட்டி அருகே நின்றுகொண்டிருந்தேன் என்ற விபரம் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். மேற்படி இடம் பேருந்து நிறுத்ததிலிருந்து 300 அடி தூரம் இருக்கும். புளித்தேவன்பட்டி கிழக்கிலிருந்து ரோட்டை வடக்காக கடக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், இறந்துபோனவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பால்பண்ணை வைத்துள்ளேன். சம்பவம நடந்தபோது பால்பண்ணை கருமாத்தூரில் இருந்தது. விபத்து சம்பந்தமாக இழப்பிடு நீதிமன்றத்தில் பெற்றுகொண்டார்கள். நான் சொல்வதுபோல் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், இறந்துபோன நபர் திடீரென்று சாலையை கடந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது நானும் மொக்கமாயனும் பேசிகொண்டிருந்தோம். எப்போதும் ஆள்நடமாட்டம் உள்ள சாலை என்றால் சரிதான். வாகனங்கள் அதிகமாக செல்லும் சாலை என்றால் சரிதான்.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.07.04 14:25:07 +0530